செ.வெ.எண்: 140 நாள்: 4/03/2013

# பத்திரிக்கைச் செய்தி

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்

## ஐந்து நிலைகளில் நடைபெறும்

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையர் அறிவிப்பு

## அட்டவணை வெளியீடு

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் இதர 14 செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஐந்து நிலைகளில் நடைபெறும் என கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநில தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன்., இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். முதல் நிலைக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

## கூட்டுறவு தேர்தல் ஆணையம்

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் இதர செயற் பதிவாளர்களான பால் வளத்துறை ஆணையர், கைத்தறித்துறை இயக்குநர், மீன் வளத்துறை ஆணையர், தொழில் வணிகத்துறை ஆணையர், கால் நடை பராமரிப்புத்துறை இயக்குநர், சர்க்கரைத்துறை இயக்குநர், பதிவாளர் (வீட்டு வசதி), சமூக நலத்துறை இயக்குநர், கதர் கிராமத் தொழில்துறை ஆணையர், வேளாண்துறை இயக்குநர் ஆகிய 14 செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் 22532 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் சட்டப்படியும், நேர்மையாகவும் நடத்தப்படுவதற்காக தமிழக அரசு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையம் ஒன்றை அமைத்தது. இதன் ஆணையராக திரு. ம. ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) பொறுப்பேற்றுள்ளார். இந்த தேர்தல் ஆணையம்தான் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை தற்போது நடத்த உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்த தனியாக மாநில தேர்தல் ஆணையம் ஒன்று இருப்பதைப் போல கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்த கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநில தேர்தல் ஆணையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஐந்து நிலைகளில் தேர்தல்

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஐந்து நிலைகளில் நடைபெறவுள்ளது.

முதல் நிலையில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தவிர இதர தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இரண்டாம் நிலையில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், செயல்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மத்தியவகை கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது.

மூன்றாம் நிலையில் மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், (தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆகியவை தவிர) இதர தலைமை கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது.

நான்காம் நிலையில் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு அச்சகங்கள், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி ஆகிய கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஐந்தாம் நிலையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது.

## நான்கு கட்டத் தேர்தல்

முதல் நிலையில் தேர்தல் நடத்தப்படவுள்ள 22192 சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது. முதல் கட்டத்தில் 5855 சங்கங்களுக்கும், இரண்டாம் கட்டத்தில் 5603 சங்கங்களுக்கும், மூன்றாம் கட்டத்தில் 5481 சங்கங்களுக்கும், நான்காம் கட்டத்தில் 5253 சங்கங்களுக்கும் நடத்தப்படவுள்ளது. முதல் கட்டத் தேர்தல் 5.4.2013 அன்றும், இரண்டாம் கட்டத் தேர்தல் 12.4.2013 அன்றும், மூன்றாம் கட்டத் தேர்தல் 19.4.2013 அன்றும், நான்காம் கட்டத் தேர்தல் 27.4.2013 அன்றும் நடைபெறவுள்ளது.

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

தேர்தலின் போது சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகள் ஏற்படக் கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் கண்டறியப்பட்டு அவற்றிற்கு காவல்துறை மூலம் கூடுதல் பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாக்குப் பதிவு அமைதியாக நடைபெறுவதற்கும், வாக்குப் பெட்டிகளை பாதுகாப்பதற்கும் காவல்துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தேர்தல் பார்வையாளர்கள்

இதற்குமுன் நடைபெற்ற கூட்டுறவுச் சங்க தேர்தல்களில் இல்லாத வகையில் தற்போது கூட்டுறவு தேர்தல் ஆணையம் மூலம் நடத்தப்படும் இந்த தேர்தலுக்கு தேர்தல் பார்வையாளர்கள் எல்லா மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட உள்ளனர். இந்த பார்வையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் விதி மீறல்கள் இன்றியும், அமைதியான முறையிலும் தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வார்கள்.

## பிற நிலைகளுக்கான தேர்தல் தேதி

முதல் நிலைக்கான தேர்தல் நடைமுறைகள் 4.3.2013 தேதி தொடங்கி 6.5.2013ல் முடிவு பெறும். இரண்டாம் நிலைக்கான தேர்தல் அட்டவணை தொடர்ந்து வெளியிடப்படும். இவ்வாறே அடுத்த நிலைகளுக்கான தேர்தல் அட்டவணை வெளியிடப்படும்.

## கட்டுப்பாட்டு அறை

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் குறித்த விபரங்கள் பெறவோ அல்லது புகார்கள் ஏதுமிருப்பின் அது பற்றி தெரிவிக்கவோ தேர்தல் ஆணைய அலுவலகத்தில் 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை செயல்படும் **24351403** தொலைபேசி எண்ணில் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ளலாம்.

ஆணையர் 4.3.13



வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9